ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

17.04.2025

1. சண்முக ஜோதி சரவண ஜோதி
சகலரும் வணங்கிடும் அரங்கனென் ஜோதி
மண்ணுலகே பயனுற வேண்டி
மகான் அரங்கனும் அருட்சுவடி வழி

2. வழிதனில் குருவார அருளாசியாக
வழங்குவேன் விசுவாவசு ஆண்டு தகர் திங்கள்
தெளிவுபட முதல் குருவார ஆசியும் தன்னை
தேசிகன் என் பீடம் கண்டு வணங்க

3. வணங்கவே மக்களுக்கு மாற்றம்
வருங்காலம் வளம் ஆகும்படி
இணங்கி அருள் செய்வேன்
ஏழாம்படை வீடாக வேலவனும் அருள

4. அருளவே பிரணவக் குடில் தன்னில்
அன்னமதும் அருளமுதாகவே
அருள்புரிந்து வேலவனும் கலந்திட
அன்னதான மகாசேவை தன்னில்

5. தன்னிலே பொருளுதவி செய்து
தானும் தருமவான்கள் என
அண்ணல் என் வழி சரணாகதி
அடைந்திட சர்வ பாதுகாப்பாய் நின்று

6. நின்றுமே தருமவான்களெல்லாம்
நிலையுயர அழியாமை பெற
நன்றான வரங்களும் தருவேன்
ஞானிகள் பேரிலான பூசை தனை

7. பூசைதனை ஏற்று மக்கள்
பூவுலகம் எங்கிலும் செய்திட
பூசை பலனாக உலகம் தன்னில்
புண்ணிய வழியான சேவைகளும்

8. சேவைகளும் செயல்பாடுகளுமாகி
சிக்கலான எதிர்மறைகள் விலகி
அவணியில் நல்லோர்கள் தலைமை
அமையவே ஞான ஆட்சியாக

9. ஆகவே மக்களை காக்கின்ற
ஆற்றலாய் உலகை மாற்றுகின்ற
மகான்கள் துணைகள் கொண்ட
மகத்தான ஞானிகள் ஆட்சி அமைந்து

10. அமைந்துமே அரங்கன் எந்தன்
அவதார வேண்டலின் படியே
அமைந்திடும் ஞானஆட்சி காலம்
அன்னதனால் உலகோர் வேண்டி

11. வேண்டியே என் பீடம் வருகவே
விரைந்து உலகமே மாற்றம்
கண்டிடும் அரங்கன் என் அருள்பட
கண்டுரைத்த குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி